சென்னை
வெள்ளி
பிப்ரவரி 19,
2021
மாணவர் பதிப்பு

# தினமலர்

விலை
ரூ.3/-

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
www.dinamalar.com



# இரு கண்கள்

தொழிலும் கல்வியும்தான் இவரது இரு கண்கள். இளைஞர்களுக்கும், பெரியோர்களுக்கும் ஆக்கம் தரும் நூலகங்களை கிராமந்தோறும், நகரந்தோறும் அமைக்க அரசு முன்வரவேண்டும். தொழிலதிபர்கள் லாபத்தில் ஒரு பங்கை இப்பெரும் பணிக்கு அளிக்க வேண்டும் என்று பேசியவர்.

## யார் இவர்?

தெரிந்துகொள்ள
பக்கம் 5க்கு வாங்க!

பட்டம் ➔ 03 வேற்றுக்கிரகங்களில் உயிரினங்கள் இருக்கின்றனவா?
08 இந்திய ஆங்கிலத்துக்கு கூகுள் தரும் மரியாதை
11 உச்சம் தொட்ட ஜோஷ்னா சின்னப்பா

# கல்வியும் தொழிலும் இவர் கண்கள்!

**பல தொழிற்சாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் ஏற்படுத்தியவர் இவர். சுதந்திரப் போராட்ட வீரர், கல்வியாளர், தேசப்பற்றுமிக்க பல தலைவர்களை ஆதரித்தவர். இலங்கை தோட்டத் தொழிலாளர்களுக்காகவும், உரிமைகளுக்காகவும் பாடுபட்டவர். அவர்தான் மதுரை தியாகராசர் கல்லூரியின் நிறுவனர் கருமுத்து தியாகராசர்.**

## கல்வி

ஆரம்பத்தில் திண்ணைப் பள்ளியில் படித்த இவர், பின்னர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து ஒன்பதாம் வகுப்பு வரையில் பயின்றார். அதன் பின் தந்தை இறந்துவிட, அண்ணனின் அரவணைப்பில் இலங்கைக்குச் சென்றார். அங்கேயே படித்தார். பதினேழாவது வயதிற்குப் பிறகு, அவர் மீண்டும் மதுரைக்கு வந்து கல்வி கற்றார். இப்படி இலங்கைக்கும், இந்தியாவுக்கும் அவர் அடிக்கடி சென்று வந்தார். அதுவும் கப்பல் மூலம் பயணம் மேற்கொண்டதால், இலங்கை அதிகாரிகளின் நடவடிக்கைகள், அவரை வேதனை கொள்ளச் செய்தன.

## உரிமைகளுக்காகப் போராடியவர்

தூத்துக்குடியில் இருந்து கப்பல் வழியாக இலங்கை செல்லும்போதெல்லாம், விடுதலை வீரர் வ.உ. சிதம்பரனாரை சந்தித்துப் பேசுவார். இலங்கை தேயிலைத் தோட்டங்களில் தமிழகத்தில் இருந்து சென்ற தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுவதை அறிந்து, போராட்டங்கள் நடத்தினார். அந்தக் கொடுமைகள் குறித்து இலங்கை, இந்திய நாளிதழ்களின் கவனத்துக்கும் கொண்டு சென்றார். 1914 முதல் 1917 வரையில் அவரது போராட்டம் தொடர்ந்தது.

அந்தக் காலத்தில் இலங்கை செல்லும் பயணிகள், இராமநாதபுரம் மண்டபம் பகுதியில் ஏழு நாட்கள் தடுப்புக் காவல் முகாமில் தங்கவைக்கப்படுவர். தங்கள் உடைகளை பயணிகள் களையவேண்டும். அங்கேயே அரசுக்கு ஏழணா (43.75 பைசா) கொடுத்து விடவேண்டும். அவர்கள் கொடுக்கும் கோவணத்தை வாங்கி, பலர் முன்னிலையில் அணிந்துகொள்ள வேண்டும் போன்ற சோதனை நடைமுறைகள் இருந்தன. சோதனைக்கு உட்பட்ட நோய் அறிகுறி உள்ளவர்களின் கைகளில், சூடும் போட்டார்கள். இந்தச் சூடு ஒரு வாரத்தில் மறைந்துவிடும் என்று துறைசு அதிகாரிகள் கூறினார்கள்.

உண்மையில் அந்தச் சூடு, ஆண்டுகள் பலவாகியும் மறையவில்லை. தழும்பு மாறாமல் அப்படியே இருந்தது. அடையாளத் தழும்பு மாறாமல் இருந்த நபர்களைத் தேடிக் கண்டுபிடித்து வந்து அதிகாரிகள் முன்னிலையில் நிறுத்தினார் தியாகராசர். இடைவிடாத போராட்டத்துக்குப் பிறகு சூடுபோடும் பழக்கம் நிறுத்தப்பட்டது.

## காந்தியை மாற்றிய நிகழ்வு

இரண்டாம் உலகப்போர் (1939 – 1945), ஆங்கிலேயர் ஆட்சியின்போது ஏற்பட்டது. தேசத் தலைவர்கள் பலர் சிறையில் இருந்தனர். பெரிய தொழில் அதிபர்களை கட்டாயப்படுத்தி நிதி வசூலித்தது ஆங்கிலேய அரசு. பல தென்னாட்டு அதிபர்கள் பயந்துகொண்டு நிதி கொடுத்தனர். ஆனால், தியாகராசர் ஒரு பைசாகூட நிதி தர இயலாது என்று மறுத்துவிட்டார்.

ஒத்துழையாமை இயக்கம், கதர், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு ஆகிய பணிகளில் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்த காந்தி, 1921இல் மதுரை வந்தார். மேல மாசி வீதியில் இருந்த தியாகராசரின் இல்லத்தில் தங்கியிருந்தார்.

நாட்டில் நிறைய பேர் வறுமையில் வாழும்போது தனக்கு மட்டும் ஏன் கோட்டும், சூட்டும் என்று வருந்திய காந்தி, வேட்டிக்கு மாறினார். மேலே துண்டு மட்டும் அணியும் வழக்கத்தை மேற்கொண்டார். காந்திக்கு வேட்டி கட்டத் தெரியவில்லை. விருதுநகர் முத்துக்குமார் பிள்ளை என்பவரும், தியாகராசரும்தான் காந்திக்கு வேட்டி கட்ட உதவினார்கள். காந்தி முழு ஆடையைத் துறந்த வரலாற்று நிகழ்வு, தியாகராசரின் இல்லத்தில்தான் நடைபெற்றது.

சுபாஷ் சந்திரபோஸ் 1940இல் மதுரை வந்தபோது, தியாகராசரின் விருந்தினராகத் தங்கி இருந்தார் என்பது இன்னொரு முக்கிய நிகழ்வு. நேருவுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் பெற்றிருந்தார் தியாகராசர்.

## அரசியலில் நாட்டமின்மை

தோட்டக் கலையிலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. இவருக்குச் சொந்தமான மாளிகை, தொழிற்சாலை, கல்லூரி ஆகியவற்றில் எல்லாம் தோட்டம் அமைப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தினார். கோவை, பெங்களூருவில் இருந்து தோட்டக்கலை வல்லுநர்களை அழைத்து வந்து, தோட்டம் அமைத்தார்.

ஆரம்பத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து சுதந்திரத்திற்காகப் போராடினார். 1952இல் பிரஜா சோஷலிஸ்ட் என்ற கட்சியின் சார்பில் தேர்தலில் நின்று தோல்வியுற்றார். அதன் பிறகு அரசியல் என்றாலே விலகி நின்றார்.

சுதந்திரா கட்சியின் மாநாடு மதுரையில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொள்ள இராஜாஜி, தியாகராசருக்கு அழைப்பு விடுத்தார். அவரது இல்லம் சென்று, கட்சியில் சேருமாறு கூறினார். அதில் சேர தியாகராசர் விருப்பம் கொள்ளவில்லை. மாநாட்டிற்கு நிதியும் கொடுக்கவில்லை. தொழில் துறையிலேயே அவருக்கு நாட்டம் அதிகம் இருந்தது.

## வளம்பெறாத இந்தி

'வளம்பெறாத, கதம்ப மொழியாகிய இந்தி மொழியை, தேசிய மொழி என்று கூறிக்கொண்டு நேர்மையற்ற முறையில், அதை நம் மீது திணிக்கப் பார்க்கின்றனர் வடமாநிலத்தவர். அதற்காக சூழ்ச்சியும் செய்து வருகின்றனர். நாட்டில் வழங்கும் வட்டார மொழிகளும் தேசிய மொழிகளே என்ற உண்மையை



**காலம்:**
**பிறப்பு: 16.06.1893**
**மறைவு: 29.07.1974**

அவர்கள் உணரவேண்டும். பல மொழி வழங்கும் நாடு, ஒரு குறிப்பிட்ட மொழியைப் பொது மொழியாகக் கொண்டு வருவது புதுமையாக உள்ளது. ஒருவருக்குத் தாயை விடவும் சிறந்தது தாய் மொழியாகும். மொழியிலும், சமயத்திலும் அரசு தலையிடுவது, பெரும் பிளவை விளைவிக்கும்' என்று இந்தி மொழியை, மத்திய அரசு திணித்தபோது கருத்துத் தெரிவித்தார்.

1938இல் தமிழ்நாட்டில் இந்தியை கட்டாயமாகப் பாடமாக வைக்க முயன்றபோதும் அதைக் கடுமையாக எதிர்த்தார் தியாகராசர். அப்போது முதல்வராக இருந்த இராஜாஜிக்கு, இது பற்றி கடிதமும் எழுதினார்.

## கல்விக்கூடங்களின் நோக்கம்

'வெறும் அறிவை மட்டுமே கொடுப்பது கல்விக்கூடங்களின் நோக்கமாக இருக்கக் கூடாது. நமது பண்பாட்டையும் நாகரிகத்தையும் மேன்மைபெற உதவும் வகையில், நம் கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும்' என்றார்.

பண்டிதமணி கதிரேசச் செட்டியார் வைத்திருந்த நூல்கள் அனைத்தையும் தியாகராசர் வாங்கி, தம் நூலகத்தில் வைத்துக்கொண்டார். இராமநாதபுர ராஜாவின் நூல்களையும் வாங்கி, தம் நூலகத்தில் பாதுகாத்தார். புகழை ஒரு போதும் விரும்பாத இவர், தான் தோற்றுவித்த மதுரை தியாகராசர் கல்லூரியில், நிறுவன நாள் என்ற ஒன்றைக் கொண்டாட அனுமதி அளித்ததே இல்லை.

## நாளிதழ் தொடக்கம்

மொழிப்பற்றின் காரணமாக, மதுரையில் இருந்து வெளிவருவது போல், 'தமிழ்நாடு' என்ற பெயரில் நாளிதழ் ஒன்றைத் தொடங்கினார். தனித்தமிழே அதன் குறிக்கோளாக இருந்தது. ஆனால், பொதுமக்களின் ஆதரவைப் பெறஇயலாமல் போய்விட்டது. இதனால் 1973 முதல் 1978 வரை வந்து பின்னர் அது நின்றுவிட்டது.

மதுரையில் தியாகராசர் என்ற பெயரில் கல்லூரி, பாலிடெக்னிக் தொடங்கினார். பாங்க் ஆப் மதுரை (*Bank of Madurai*) என்ற வங்கியையும் (1943இல்) இவர்தான் தொடங்கினார். பல தொழிற்சாலைகளை நிறுவி வேலைவாய்ப்பும், நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சிபெற காரணமாக இருந்தார். அதனால் இவர், ஆலைகளின் அரசர் (*Textile King*) என்றும் அழைக்கப்படுகிறார்.

மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர் உள்ளிட்ட பதினெட்டுக்கும் மேற்பட்ட இடங்களில் பல நூற்பாலைகளை இவர் ஏற்படுத்தினார். கேரளத்திலும் விஜயமோகினி, லெட்சுமி, அழகப்பா நெசவு ஆலைகள் இவர் உருவாக்கியவைதான்.

## நூல் நிலையம்

'நூல் நிலையம்தான் பெருஞ்செல்வம். இளைஞர்களுக்கும், பெரியோர்களுக்கும் ஆக்கம் தரும் நூலகங்களை கிராமந்தோறும், நகரந்தோறும் அமைக்க அரசு முன்வரவேண்டும். தொழிலதிபர்கள் லாபத்தில் ஒரு பங்கை இப்பெரும் பணிக்கு அளிக்க வேண்டும். தமிழ் இலக்கியச் செல்வங்களைக் காத்த தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையரைப் போல், ஒவ்வொருவரும் நூல்களைப் பேணிக்காக்க வேண்டும்' என்று கூறினார்.

உதவி:
டாக்டர் ராதா தியாகராஜன் எழுதிய
'ஆலை அரசர் கருமுத்து தியாகராசர்'